www.tamilarangam.net

பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டமும்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

தமிழீழ விடுதலைப் போராட்டமும்

பழ. நெடுமாறன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

பழ. நெடுமாறன்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

வெளியீடு:
தமிழ்க்குலம் பதிப்பாலயம்
17/1, நரசிம்மபுரம், மயிலை, சென்னை - 600 004.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டமும்
தமிழீழ விடுதலைப் போராட்டமும்

© ஆசிரியருக்கு

முதல் பதிப்பு : அக்டோபர், 2000

வெளியீடு : தமிழ்க்குலம் பதிப்பாலயம்,
17/1, நரசிம்மபுரம்,
மயிலை,
சென்னை - 600 004.

விலை : ரூ. 5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னுரை

கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக ஈழத் தமிழர்கள் தங்கள் வாழ்வுரிமைக்காக போராடி வருகிறார்கள். 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் 1977ஆம் ஆண்டு வரை ''சிங்களருக்குச் சமமாக தமிழர்கள் நடத்தப்படவேண்டும்: சிங்கள மொழிக்கு இணையாக தமிழ் மொழி மதிக்கப்படவேண்டும்'' என்பது போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே ஈழத் தமிழர்கள் அறவழியில் போராடினார்கள்.

இத்தகைய அறவழிப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு சிங்கள அரசுகள் தொடர்ந்து முயற்சி செய்தன. சிங்கள அரசுகளுடன் தமிழ்த் தலைவர்கள் செய்துகொண்ட உடன்பாடுகள் மதிக்கப்படாமல் கிழித்தெறியப்பட்டன. எனவே வேறு வழியில்லாமல் 1977ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் கூடிய அனைத்துக் கட்சி தமிழர்களும் ஒன்றிணைந்து தமிழீழத் தனிநாடு பெறுவது ஒன்றே ஈழத் தமிழர்களின் துயரைத் துடைப்பதற்கான ஒரே வழி என்பதைப் பகிரங்கமாக அறிவித்தார்கள். அதையே முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்கள். மிகப் பெருவாரியான வாக்குகளினால் ஈழத் தமிழர்கள் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவு அளித்தார்கள். இதைக் கண்டு ஆத்திரம் அடைந்த சிங்கள இன வெறியர்களின் தூண்டுதலின் விளைவாக தமிழர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை சிங்கள அரசு முடுக்கி விட்டது. இதன் விளைவாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தைத் தொடங்க நேரிட்டது.

கடந்த 25 ஆண்டு காலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திவரும் போராட்டம் படிப்படியான வளர்ச்சியைப் பெற்று சிங்கள இராணுவத்தை நேருக்கு நேர் சந்தித்துப் போராடும் வலிமையைப் பெற்றிருக்கிறது. தமிழீழப் பகுதியில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு மேலான பகுதிகளை மீட்டுள்ளது. இந்தப் போராட்டம் இறுதியான கால கட்டத்தை அடைந்திருக்கும் இந்த வேளையில் உலக நாடுகளின் ஆதரவும் அங்கீகாரமும் இதற்குத் தேவையாகும்.

www.tamilarangam.net

பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திவரும் இந்தப் போராட்டத்திற்கு இதுவரை எந்த ஒரு நாடோ அல்லது அரசோ ஆதரவு தரவில்லை. அதே வேளையில் யாசர் **அராபத்** தலைமையில் நடைபெற்றுவரும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு அரேபிய நாடுகள் மட்டுமல்லாமல் அணிசாரா நாடுகள் அனைத்தும் முழுமையான ஆதரவும் அங்கீகாரமும் அளித்து வருகின்றன.

அடிப்படையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கும் ஏராளமான ஒற்றுமைகள் உண்டு. பாலஸ்தீனிய அராபியர்களின் பிரச்சினைகளும் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளும் வெவ்வேறானவை அல்ல. இரண்டும் ஒன்றுதான். அப்படியிருந்தும் உலக நாடுகள் பாலஸ்தீனிய அராபியர்களுக்கு அளிக்கும் ஆதரவில் ஒரு சிறு பகுதியைக் கூட ஈழத் தமிழர்களுக்கு அளிக்கத் தயங்குவது ஏன்?

பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய அரசு **ஜவஹர்லால் நேரு** காலத்திலிருந்து **வாஜ்பாய்** காலம் வரை தொடர்ந்து முழுமையான ஆதரவு அளித்து வருகிறது. இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஆதரவாக உள்ளன. ஆனால் இந்திய அரசோ அல்லது இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இயங்கிவரும் அரசியல் கட்சிகளோ ஈழப் பிரச்சினையில் ஆதரவளிக்காதது மட்டுமல்ல, அதற்கு எதிரான நிலையையும் எடுத்து இருப்பது ஏன்?

இத்தகைய நிலைப்பாடு அடிப்படையில் தவறானது மட்டுமல்ல அதற்கு எத்தகைய நியாயமும் கிடையாது என்பதை எடுத்துக்காட்டத்தான் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. பாலஸ்தீனம் - தமிழீழம் ஆகிய இரு நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் எல்லாவகையிலும் ஒத்திருப்பவை என்பதை அனைவரும் புரிந்துகொண்டால் மகிழ்வேன்.

பழ. நெடுமாறன்

1.10.2000
சென்னை

www.tamilarangam.net

பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் எண்ணற்ற ஒப்புவமைகள் உள்ளன.

''நாடற்ற மக்களுக்கு மக்களற்ற நாடு'' என்ற கொள்கையை முன்வைத்து யூதர்களால் பாலஸ்தீனம் அபகரிக்கப்பட்டது. கிட்டத்தட்ட அதே கொள்கையைக் கையாண்டு பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம் ஒன்று இருக்கக் கூடாது. இன ஒற்றுமைக்கு அதுதான் வழி என்று இலங்கையிலுள்ள தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைச் சிங்கள அரசு வேகமாக நடத்தி வருகிறது.

பாலஸ்தீன அரபுகளுக்குச் சொந்தமான நிலங்களை யூதர்கள் திட்டமிட்டு அபகரித்தனர். அராபியர்களின் நிலங்களை யூத தேசிய நிதியிலிருந்து அதிகப் பணம் கொடுத்து வாங்கினார்கள். போர் நடத்தி பாலஸ்தீனர்களை வெளியேற்றி விட்டு நிலத்தினை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். யூதக் குடியேற்றத்தினால் சுற்றி வளைத்து அரபுகளைத் தாக்கி பயமுறுத்தி அவர்களாகவே நிலத்தைவிட்டு ஓட வைத்தார்கள். சட்டவிரோதக் குடியேற்றத்தின் மூலம் பாசன வசதியுள்ள மேற்குக் கரை நிலங்கள் யாவும் யூதர்களால் கைப்பற்ற பட்டன.

அராபியர்களை விரட்டிவிட்டு காசாவிலும் மேற்குக் கரைப் பகுதியிலும் ஏராளமான இராணுவக் குடியேற்றங்களை உருவாக்கினார்கள். இஸ்ரேல் உருவாவதற்கு முன்னர்

www.tamilarangam.net

பாலஸ்தீனத்தில் நடந்த குடியேற்றத்தினால் பெருகிய யூத மக்கள் தொகையின் விவரம்:

1900 - 24,000

1919 - 57,000

1922 - 83,730

1931 - 1,74,000

1948 - 5,90,000

கிட்டத்தட்ட இதைப் போலவே இலங்கையில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்களைச் சிங்களவர்கள் பறித்தார்கள். தமிழீழ மக்களின் நிலங்கள் சிங்கள அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டன. சிங்கள இராணுவத்தின் கொடுமைகளினால் உள்ளூர் தமிழர்கள் அவர்களாகவே வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கிச் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தினார்கள். திரிகோணமலைப் பகுதியில் சிங்கள குடியேற்றவாசிகள் அங்கு வாழ்கிற தமிழர்களைப் பயமுறுத்தி நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு விரட்டியடித்தனர். இதன் காரணமாக இலங்கையில் வளம் நிறைந்த மூன்று போக சாகுபடி வசதியுள்ளதும், தமிழர்களுக்குச் சொந்தமானதுமான ஏராளமான நிலங்கள் சிங்களவர்களால் கைப்பற்றப்பட்டன. தமிழீழத்தின் வடக்கு - கிழக்குப் பகுதிகள் எங்கும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன.

1833ஆம் ஆண்டில் கோல்புறுக் - காமரோன் மாகாண எல்லை வகுக்கப்பட்ட காலத்தில் ஏறத்தாழ 26,500 சதுர கி.மீட்டர் பரப்பளவு நிலம் தமிழர் மரபு வழித் தாயகமாயிற்று.

1901இல் ஒன்பது மாகாணங்கள் அமைந்ததும் தமிழர் ஆட்சிப் பகுதியான வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஏறத்தாழ 19,100 சதுர கி.மீட்டர் பரப்பளவைக் கொண்டிருந்தன. முத்துச் சலாப வன்னிமையும் தம்பன்

www.tamilarangam.net

கடலையும் தமிழர் நிலப் பகுதியாக இருந்தமை சிங்கள ஆட்சிப் பிரிவுக்குள் சேர்க்கப்பெற்றதால் ஏறத்தாழ 7,500 சதுர மைல் கி.மீட்டர் பரப்பளவு பறிக்கப்பட்டது.

1948க்குப் பின் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தில் கிழக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 7,000 சதுர கி.மீட்டர் பரப்பளவையும் வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 500 சதுர கி.மீட்டர் பரப்பளவையும் தமிழர் எதிர்ப்பையும் மீறி கொழும்பு அரசு சிங்களக் குடியேற்றவாசிகளிடம் கொடுத்துள்ளது.

இவ்வாறு கடந்த 40 ஆண்டுகளில் சிங்களவர் கையகப்படுத்திய ஏறத்தாழ 7,500 சதுர கி.மீ. பரப்பளவையும் சிங்களப் பகுதிகளுடன் சேர்த்துக் கொள்வதுதான் அண்மையில் வெளியிடப்பெற்ற மாகாண எல்லை முன்வரைவுக் கருத்துரையின் நோக்கமாகும்.

1833க்கு முன்னர் 25 சதவீதம் இருந்த தமிழினம் தீவின் நிலப்பரப்பில் 35 சதவீதமான பரப்பளவைத் தம் மரபு வழித் தாயகமாகக் கொண்டு ஆட்சி எல்லைக்குள் வைத்திருந்தது.

1901இல் இந்த நிலப்பரப்பு 35 சதவீதத்திலிருந்து 29 சதவீதமாகக் குறைந்தது.

1995இல் அதே 25 சதவீதமான தமிழினத்திற்கு தீவின் 17 சதவீதமான நிலப்பரப்பை மட்டும் அளிக்க சிங்கள அரசு திட்டமிடுகிறது.

கடந்த 162 ஆண்டுகளில் (1833 முதல் 1995 வரை) இலங்கைத் தீவில் தமிழரின் மரபு வழித் தாயகத்தில் 50 சதவீதம் நிலப்பகுதியைச் சிங்களவர் படிப்படியாகக் கையகப்படுத்தி வந்துள்ளனர். தொடர்ந்து மேலும் புதிய நிலங்களைத் தமிழரிடம் இருந்து கையகப்படுத்தத் திட்டமிட்டு வருகின்றனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனியப் பகுதிகளில் வாழும் அராபியர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகள் மற்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஓரவஞ்சனைகளைப் போல இலங்கையில் சிங்களவர் மிகுதியாக வாழும் பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கும் இழைக்கப் பட்டன.

மறுக்கப்படும் கல்வி

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் வாழும் அராபியர் களுக்கான கல்வித் திட்டம் வேறாக மாற்றி அமைக்கப்பட்டு கல்வித்தரம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. இலங்கையிலும் மலையகத் தமிழர்களுக்குத் தனியாகக் கல்வித் திட்டம் அமுல் நடத்தப்பட்டு கல்வித் தரம் குறைக்கப்பட்டது. 10 வயது வரைதான் தமிழ் மாணவர்களுக்கு கல்வி வசதி அளிக்கப்படுகிறது. 5வது வகுப்புக்குமேல் அவர்களுக்கு படிக்க வசதியில்லை. இந்த அரைகுறைக் கல்விகூட 2.5 இலட்சம் மலையகத் தமிழ்ச் சிறுவர்களுக்கு மறுக்கப்பட்டது.

பாலஸ்தீனத்தில் காசா பகுதியிலும் மேற்குக் கரை களிலும் 1967க்கு முன்னர் இருந்த கட்டாயக் கல்வித் திட்டம் ஆக்கிரமிப்புக்குப் பின்னர் அமுல் நடத்தப்படவில்லை. இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருக்கும் கட்டாயக் கல்வித் திட்டம் மலையகத்தில் அமுல் நடத்தப்படவில்லை. தனியார் பாடசாலை தொடங்கப்படுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. 1963ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள எல்லா பாடசாலைகளையும், கல்லூரிகளையும் தேசிய மயமாக்கிய இலங்கை அரசு மலையகத் தமிழர்களுக்காக நடத்தப்படும் கல்விச் சாலைகளைத் தேசியமயமாக்க மறுத்தது.

ஆக்கிரமிப்பாளர்களின் தொல்லைகளினாலும் கல்விக்கான வசதி இன்மையினாலும் ஆரம்பக் கல்வி கற்கும் அரபு மாணவர்களின் விகிதம் வெகுவாகக் குறைந்தது. பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையிலும் காசாவிலும் ஆரம்பக் கல்வி கற்கும்மாணவர்களின் விகிதம் 1967 - 68ல் 3.2 சதவிகிதமாகவும் 1974 - 67ல் 2.7 சதவிகிதமாகவும் குறைந்தது.

www.tamilarangam.net

இலங்கையில் மலையகத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் தொகை 5.4 சதவிகிதமாகக் குறைந்தது. கல்வி கற்கும் வயதிலுள்ள மொத்தம் 3 இலட்சம் தமிழ்ச் சிறுவர்களில் 79,000 சிறுவர்கள் மட்டுமே கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

சுகாதார வசதியின்மை

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் சுகாதார வசதிகள் அறவே செய்யப்படாததால் அரேபியக் குழந்தைகளின் இறப்பு 8 சதவிகிதமாக உள்ளது. இலங்கை மலையகத்தில் வாழும் தமிழர்களின் குழந்தைகளின் இறப்பு 10 சதவிகிதமாக உள்ளது. இது உலகில் மிக அதிக அளவாகும். போதுமான சத்துணவு இல்லாததினால் இவ்வாறு சாவு எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இலங்கை முழுவதிலும் வயதானவர்கள் இறக்கும் விகிதாசாரம் 34.7 சதவிகிதமாகும். ஆனால் மலையகத் தமிழகத்தில் இது 62.4 சதவிகிதமாக இருக்கிறது.

இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் வருவாயில் 76% உணவுக்காகவே செலவிடுகின்றனர். இந்த அளவுக்குக் குறைந்த வருவாய் உள்ள மக்களுக்குச் சம்பள உயர்வு தர இலங்கை அரசு தொடர்ந்து மறுத்துவருகிறது.

இனக் கலவரங்கள்

1947இல் பாலஸ்தீனிய அராபியர்கள் யூத இன வெறியர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி காசா மற்றும் மேற்குப் பகுதியில் குடிபெயர்ந்தனர். 1967ஆம் ஆண்டு போரின்போது அங்கிருந்தும் விரட்டப்பட்டு சிரியா போன்ற நாடுகளுக்கு இடம் பெயர்ந்து அகதிகள் முகாம்களில் வாழ்ந்துவருகின்றனர். அங்கும் அவர்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அதைப் போலவே இலங்கையில் 1958லும் 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளிலும் தமிழர்களின் மீது சிங்கள இன வெறியர்கள் தாக்குதலைத் தொடுத்தனர். இந்த இனக்

www.tamilarangam.net

கலவரங்களின் விளைவாக ஏராளமான தமிழர்கள் பலியாகி, சொத்து சுகங்களை இழந்து அகதிகளாக வட பகுதிகளில் குடியேறினார்கள். அங்கும் நிலம் கொடுக்க மறுத்து சிங்கள அரசு அவர்களை விரட்டியடித்து வருகிறது.

வாக்குரிமை பறிப்பு

அராபிய மக்களை அடிமைப்படுத்தி வைத்துக்கொண்டு அதே நேரத்தில் அவர்களுக்கு முழு உரிமை கொடுத்திருப்பதாக வெளி உலகத்திற்குக் காட்டுவதற்காக சுயாட்சி என்ற வாக்குறுதியினைக் கூறி ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தேர்தலை யூதர்கள் நடத்திய போதிலும் அரபு மக்கள் உறுதியாக நின்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு ஆதரவானவர்களையே தேர்ந்தெடுத்தார்கள். அதைப் போலவே இலங்கையிலும் தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்திவரும் சிங்கள அரசு தமிழ்ப் பகுதிகளை வளர்ச்சியடையச் செய்கிறோம் என்ற போலி வாக்குறுதிகளை அள்ளி வீசிய போதிலும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும், மாவட்ட சபையின் தேர்தல்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகளையே தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்தனர். சிங்களக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட தமிழர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

1948ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற புதிய நாடு பிறந்தபோது சுமார் 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட அராபியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. கிட்டத்தட்ட அதே காலத்தில் இலங்கை சுதந்திர நாடானபோது 10 இலட்சம் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

அகதிகள்

தற்போதுள்ள 35 இலட்சம் பாலஸ்தீனியர்களில் 5 இலட்சம் பேர் இஸ்ரேலில் வசிக்கிறார்கள். மற்றவர்கள் பல்வேறு நாடுகளில் அகதிகளாகச் சிதறிக் கிடக்கிறார்கள்.

www.tamilarangam.net

ஜோர்டன் ஆற்றின் மேற்குக் கரையில் சுமார் 7 இலட்சம் பேர் வசிக்கிறார்கள். பாலஸ்தீனிய அகதிகளில் பெரும்பாலோர் ஜோர்டான் நாட்டில் வாழ்கிறார்கள். ஜோர்டான் மக்கள் தொகையில் பாதிக்கு மேலானவர்கள் பாலஸ்தீன அகதிகளே. காசா பகுதியில் சுமார் 4 இலட்சம் பேரும் லெபனானில் 3,50,000 பேரும், சிரியாவில் 1,75,000 பேரும், குவைத் நாட்டில் 1,45,000 பேரும் வாழ்கிறார்கள். மற்றும் சௌதி அரேபியா, லிபியா, எகிப்து ஆகிய நாடுகளிலும் ஏராளமான பாலஸ்தீனிய அகதிகள் இருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் 1980ஆம் ஆண்டிற்கு முன் எடுக்கப்பட்டவையாகும்.

பாலஸ்தீனிய அகதிகளைப் போலவே ஈழத் தமிழர்கள் பலரும் பிறந்த மண்ணில் வாழ முடியாமல் தவிக்கிறார்கள். 1964ஆம் ஆண்டு முதல் இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்களில் சுமார் 5 இலட்சம் பேர் இந்தியாவிற்கு விரட்டப்பட்டனர். 1983ஆம் ஆண்டிற்குப் பிறகு சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இன்னமும் வந்து கொண்டிருக்கிறார்கள். பிரிட்டன், ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஏறத்தாழ 6 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாகக் குடிபெயர்ந்து இருக்கிறார்கள். இன்னும் ஆப்பிரிக்கா மற்றும் அரேபிய நாடுகளில் பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்கள் அடைக்கலம் புகுந்து இருக்கிறார்கள். தமிழீழத்திலேயே ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் சொந்த ஊர்களில் வாழ முடியாமல் இடம் பெயர்ந்து காடுகளிலும், சாலையோரங் களிலும் தங்குவதற்கு இடமோ, உண்ணுவதற்கு உணவோ இல்லாமல் பெரும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளார்கள்.

பாலஸ்தீன அராபிய அகதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை உதவி செய்கிறது. அந்த உதவியைப் பெற்று அவர்கள் வாழ முடிகிறது. ஆனால் இலங்கையிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் பல நாட்டு அரசுகள் அளிக்கும் உதவியுடன்

www.tamilarangam.net

மிகவும் அவலமான வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களுக்கு வஞ்சனை

பொருளாதாரத் துறையிலும், தொழிற் துறையிலும் விவசாயத் துறையிலும் ஈழநாட்டுத் தமிழர்கள் எப்படி யெல்லாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தால் அதிர்ச்சி அடைவீர்கள். உலகில் எந்த ஒரு நாட்டிலும் தேசியச் சிறுபான்மையினராக உள்ள மக்கள் இவ்வாறு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றை பார்த்திருக்க முடியாது.

இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதையும் தமிழர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருவதையும் ஆதாரப்பூர்வமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாராளுமன்றக் கேலிக்கூத்து

இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிமுறை என்பது எவ்வளவு கேலிக்கூத்தாக இருக்கிறதென்பதையும் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் படிப்படியாக குறைக்கப்பட்ட வரலாற்றையும், அரசாங்கப் பதவிகளிலும், இராணுவம், போலீஸ் ஆகியவற்றில் தமிழர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் கல்வித்துறையில் தமிழர்கள் தொடர்ந்து ஒதுக்கப்படுவதையும் உங்கள் பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு அங்கு வாழும் 35 இலட்சம் தமிழ் மக்கள் எவ்வாறெல்லாம் ஒடுக்கப் பட்டனர் என்பதையும், வஞ்சிக்கப்பட்டனர் என்பதையும் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றனர் என்பதையும் கீழ்க்கண்ட விபரங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

www.tamilarangam.net

பிரிட்டிஷாரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பாராளுமன்ற ஆட்சிமுறை என்பது தமிழரைப் பொறுத்தவரை கேலிக்கூத்தாகவே அமைந்துவிட்டது. சோல்பரி அரசியல் சட்டப்படி நாடாளுமன்றத்தில் மொத்தமிருந்த 95 இடங்களில் தமிழருக்கு 37 இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் 9 இடங்கள் குறைக்கப்பட்டன. 1947இல் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் 28 தமிழர்கள்தான் நாடாளுமன்றத்திற்குச் செல்ல முடிந்தது. மலையகத் தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்ட 14 தொகுதிகளில் 7 தமிழரே உறுப்பினராக வர முடிந்தது மற்றும் உள்ள 7 தொகுதிகளில் சிங்களப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அத்தொகுதிகளில் சிங்கள மக்களே அதிகமிருக்குமாறு பிரிக்கப்பட்டதே காரணமாகும். சட்டப்படி 37 இடம் தமிழர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தும் நடைமுறையில் அது 28 ஆக இருந்தது. அதிலும் திருப்தியடையாத சிங்களவர் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மேலும் குறைக்கும் முயற்சியில் இறங்கி னார்கள்.

முதலில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க, இலங்கை பிரஜா உரிமைச் சட்டம், இந்திய - பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டம், இலங்கைத் தேர்தல் வாக்குரிமைச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டங்களைக் கொணர்ந்து மலையகத்தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தனர். இதன் விளைவாக 1952இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் தொகுதிகளில் மேலும் 7 இட ங்கள் குறைந்தன. சுமார் 200 ஆண்டு காலத்திற்கு மேலாக உழைத்து இலங்கையில் வளம் கொழிக்கும் ரப்பர், தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி அந்நாட்டின் பொருளாதாரத்தைச் செழிக்க வைத்த தமிழ்த் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்த கொடுமைக்கு ஈடான கொடுமை வேறு எந்த நாட்டிலும் நடைபெறவில்லை.

தமிழர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 37 தொகுதிகளில் 14 தொகுதிகளைப் பிரித்துச் சிங்களவரிடம் கொடுக்க புதிய.

www.tamilarangam.net

சட்டம் வழி வகுத்தது. அடுத்த கட்டமாக தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களைத் தொடர்ந்து ஏற்படுத்திப் பாரம்பரியமாகத் தமிழர் பகுதியிலிருந்த இடங்களில் சிங்களப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்தனர். 1960ஆம் ஆண்டிலும் 1977ஆம் ஆண்டிலும் இரண்டு தடவைகளிலும் தொகுதிகளைத் திருத்தி அமைப்பதாகக் கூறி தொகுதிகளை நிர்ணயம் செய்ததால் தமிழர்கள் பிரதிநிதித்துவம் மேலும் குறைந்தது. இலங்கை நாடாளுமன்றதில் தமிழர் பிரதிநிதித்துவம் தொடக்கத்தில் 39% என நிர்ணயிக்கப்பட்டு படிப்படியாகக் குறைந்து இப்போது 16% ஆக உள்ளது.

கீழ்க்கண்ட பட்டியல் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் எவ்வாறு குறைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கும்:

	மொத்த தொகுதிகள்	சிங்கள இன தொகுதிகள்	தமிழினத்திற்கான தொகுதிகள்	தமிழனுக்கு உள்ள பிரதிநிதித்துவம்
சோல்பரி அரசியல் அமைப்பின் மூலம் இன ரீதியாகப் பெறக் கூடியதாக இருந்த பிரதிநிதித்துவம்	95	58	37	39%
முதலாவது பாராளுமன்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் (1947இல்)	95	70	25	26.3%

www.tamilarangam.net

மலையகத் தமிழர் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் பின்னர் 1952இல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில்	95	74	19	20%
தொகுதி எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதால் 1970இல்	151	124	27	17.8%
இரண்டாவது தடவை தொகுதி எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதன் பின் 1977இல்	168	137	31	18%
ஜெயவர்த்தனாவின் புதிய அரசியல் அமைப்பின் தேர்தல் முறைப்படி இப்போதைய தேர்தல்களில்	196	163	33	16%

ஜெயவர்த்தனாவின் புதிய அரசியலமைப்பின்படி மாகாணத்துக்கு 4 என்ற அடிப்படையில் அதிகரிக்கப்பட வேண்டிய 28 தொகுதிகளில் 2 தொகுதிகளை மட்டுமே தமிழ்ப் பகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

பொருளாதாரப் புறக்கணிப்பு

வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, பிரதேச வளர்ச்சி போன்றவற்றில் தமிழ்ப் பகுதிகள் சிங்கள ஆட்சியினரால் அறவே புறக்கணிக்கப்படுகின்றன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள தொழில் உற்பத்தி வளங்களும்,

www.tamilarangam.net

பதவி உயர்வு

	மொத்த பதவி உயர்வு	சிங்களவர்	தமிழர்	தமிழர்கள் பெற்ற பதவி உயர்வு விகிதம்
கல்விச் சேவை 3ஆம் தரம்	53	45	8	15.3%
1981ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை	34	27	7	20.5%
போலீஸ் சார்ஜண்ட்	43	40	3	7%

சேவையில் உள்ளோர் (1980)

துறை	மொத்தம்	சிங்களவர்	தமிழர்	தமிழர்கள் பதவியில் உள்ள வீதம்
போலீஸ்	17000	16050	940	5%
தரைப்படை	10000	9780	220	2.2%
கடற்படை	2170	2024	146	6.7%
ஆசிரியர்கள்	136714	113264	23450	17.1%

தொழிற்துறை

தொழில் வளர்ச்சியில் தமிழ்ப் பகுதிகள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள பெரிய தொழிற்சாலைகளில் தமிழ்ப் பகுதிகளில் 3 தான் இருக்கின்றன.

www.tamilarangam.net

அந்த மூன்று ஆலைகள்கூட நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் திட்டமிட்ட ஏற்பாட்டின்படித்தான் அமைக்கப் பட்டன. சுதந்திரத்திற்குப் பின் புதிதாக அமைக்கப்பட்ட 200க்கும் அதிகமான தொழிற்சாலைகளில் ஒன்றுகூட தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளில் தொழிற்சாலைகள் தொடங்க முன்வரும் தனியாருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. திருகோணமலையில் பிரிமாமா ஆலை மட்டும் சிங்களவர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஜப்பானுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உருவாகியுள்ளது. இருக்கின்ற 3 தொழிற் சாலைகளான காங்கேசன்துறை சிமெண்ட் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை என்பவற்றின் உயர் பதவிகளில் எல்லாம் சிங்களவர்களை நியமித்து, சிற்றூழியர்களாகக் கூட சிங்களவர்களே சேர்க்கப்படுகிறார்கள். அதனால் தமிழ்ப் பகுதி மக்களின் வேலை வாய்ப்பைச் சிங்களவர்கள் பறிப்பதுடன் புதிய சிங்களக் குடியேற்றமும் ஏற்பட்டு தமிழர் நலன்கள் பறிக்கப்படுகின்றன.

தமிழ்ப் பகுதிகளில் இருக்கும் தொழிற்சாலைகளையும் சிங்களப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் முயற்சி நடைபெறுகிறது. இரசாயனத் தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப் பொருட்கள் அதிகமாக விளைகின்ற பகுதியிலுள்ள பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடிவிட்டு சிங்களப் பகுதிக்கு அந்த தொழிற்சாலை கொண்டு போகப்பட்டுள்ளது. அத்துடன் சிமெண்டுக்கான பிரதான மூலப் பொருளான சுண்ணாம்புக் கல் அதிகமாக இருக்கும் காங்கேசன்துறையில் உள்ள சிமெண்ட் ஆலையை விரிவாக்காது அங்கிருந்து சுண்ணாம்புக் கற்களை 270 மைல் தொலைவில் உள்ள சிங்களப் பகுதியான காலிக்கு எடுத்துச் சென்று அங்கு ஒரு பெரிய சிமெண்ட் தொழிற்சாலையை அமைத்து இயக்கி வருகிறார்கள். இதனால் தமிழ்ப் பகுதியின் மூலவளங்கள்

www.tamilarangam.net

சுரண்டப்படுவதுடன் இந்த மூல வளங்களால் கிடைக்கும் வேலை வாய்ப்பையும் தமிழ் மக்கள் இழக்கிறார்கள்.

தமிழ்ப் பகுதியில் கிழக்குக் கரையோரமான புல்மேட்டைப் பகுதியில் தாராளமாகக் கிடைக்கும் இல்மனைட் கனிவளம் சுரண்டப்பட்டு ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது போலவே நாட்டில் மிகச்சிறந்த உப்பளமாகத் திகழும் ஆனைஇறவு உப்பளத்தை அபிவிருத்தி செய்வதை விடுத்து சிங்களப் பகுதியான அம்பாத் தோட்டையில் சிங்கள அரசு ஒரு உப்பளத்தை அமைத்துள்ளது.

துணுக்காய் என்னும் தமிழ்ப் பகுதியில் அமைக்கும்படி நிபுணர்களால் பரிந்துரை செய்யப்பட்ட சீனத் தொழிற்சாலை சிங்களக் குடியேற்றப் பகுதியான கல்ஓயாவில் நிர்மாணிக்கப்பட்டது.

பல உலக வல்லுனர்களால் பருத்திப் பயிருக்குச் சிறந்த இடம் என எடுத்துக் கூறப்பட்ட பூநகரிப் பகுதியைப் புறக்கணித்துவிட்டு சிங்களப் பகுதியில் பருத்தி பயிர் செய்யத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் விவசாயிகள் எந்தப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்களோ அதே விளைபொருள்களை சிங்கள அரசு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தமிழ் விவசாயிகளை நட்டமடையச் செய்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து நார்வே நாட்டு உதவியுடன் தமிழ்ப் பகுதியான காரை நகரில் செயற்படுத்தப்பட்டு வரும் சீனோர் மீன்பிடி வளர்ச்சித் திட்டத்தையும் சிங்களப் பகுதிக்கு மாற்றிவிட்டது.

தமிழ்ப் பகுதியிலுள்ள முக்கிய மீன்பிடி மையங்களில் உள்ள மீன் வளங்கள் சிங்கள மீனவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுச் சுரண்டப்படுகின்றன. முல்லைத்தீவு,

www.tamilarangam.net

மன்னார், மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகிய பகுதிகளில் ஏராளமான சிங்கள மீனவர்கள் வந்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள். தமிழ்ப் பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி வசதிகளைச்செய்து கொடுக்க மறுத்து வரும் இலங்கை அரசு சிங்கள மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்களையும், வலைகளையும் கடனாக வழங்கி அவர்களைத் தமிழ்ப் பகுதிகளில் மீன்பிடிக்க ஊக்கமளிக்கிறது. ஆரம்பத்தில் மீன்பிடிக்கும் காலங்களில் மட்டும் வந்து சென்ற சிங்கள மீனவர்கள் 15,000 பேர் தற்போது அங்கேயே நிரந்தரமாகக் குடியேறிவிட்டனர்.

கல்வியில் புறக்கணிப்பு

1978-ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தாய் மொழியில் கல்விக்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. இலங்கை அரசு மலைத்தோட்டப் பகுதியில் தமிழ் மாணவர்களுக்கு பள்ளிக்கூட வசதிகளைச் செய்து தராததால் இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களில் கால் பகுதியினர் ஆரம்பக் கல்வி பெறும் வாய்ப்பினை இழந்து விட்டனர். நாட்டின் இன விகிதாசாரத்தில் 25.2 சதவிகிதம் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் விகிதாசாரம் 19.86. ஆகவே இருக்கிறது மலையகத்தில் சுமார் 2.25 இலட்சம் தமிழ்ச் சிறுவர்கள் ஆரம்பக் கல்வியைக் கூட கற்க முடியாமல் இருக்கிறார்கள்.

கல்விக்கூடம் செல்லும் குறைந்த விகித தமிழ் மாணவர்களுக்காவது சிங்கள மாணவர்களுக்குக் கிடைப்பது போல கல்வி வசதிகள் செய்யப்படுகின்றதா என்றால் இல்லை. கல்விக்கூட வசதி, ஆசிரியர்கள் நியமனம் இவற்றில் போதிய ஒதுக்கீடு செய்யாமல் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. 23.2 சிங்கள மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் இருக்கையில் 27.4 தமிழ் மாணவர்களுக்கு

www.tamilarangam.net

ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலேயே தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் நியமனத்தில் கூட எவ்வாறு பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை கீழ்க்கண்ட அட்டவணை விளக்கும்.

74% சிங்கள மக்களுக்கு 82.9% ஆசிரியர்கள்

25.2% தமிழ் மக்களுக்கு 17.1% ஆசிரியர்கள்

26,29,177 சிங்கள மாணவருக்கு - 1,13,264 சிங்கள ஆசிரியர்கள்,

6,51,610 தமிழ் மாணவருக்கு - 23,450 தமிழ் ஆசிரியர்கள்.

ஜெயவர்த்தனா அரசு ஆட்சிக்கு வந்ததும் 25,081 ஆசிரியர்களை நியமித்தது. அதில் சிங்கள ஆசிரியர்கள் 22,399. அதாவது 89%. ஆனால் தமிழ் ஆசிரியர்கள் 2,682. அதாவது 11% மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார்கள். இன விகிதாசாரத்தின்படி இன்னும் 4000 தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தமிழ் மாணவர்கள் இந்த 4000 ஆசிரியர்களைப் பெறும் வாய்ப்பை இழந்துவிட்டாரக்ள்.

மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்குவதாகக் கூறி சிங்கள மாணவர்களுக்கு மட்டும் புத்தகங்கள் வழங்கப்பட்டு தமிழ் மாணவர்களுக்கு வழங்காமல் அவர்களுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

மேலும் 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் அறிமுகப் படுத்தப்பட்ட இனவாரித் தரப்படுத்துதல் முறையினால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் வீதத்தை கீழே கண்ட அட்டவணை விளக்கும்.

www.tamilarangam.net

பாடம்	பயிற்சி மொழி	1969	1970	1972	1973	1974
மருத்துவம்	சிங்கள மொழி	50%	57%	58.6%	62%	72.7%
	தமிழ் மொழி	50%	43%	41.4%	32%	27.3%
		1977	1978	1979	1981	
	சிங்கள மொழி	72%	57.5%	67.4%	80.7%	
	தமிழ் மொழி	28%	42.5%	32.6%	19.3%	
பொறியியல்		1969	1970	1972	1973	1974
	சிங்கள மொழி	51.7%	56%	64.7%	73.4%	81.5%
	தமிழ் மொழி	48.3%	44%	33.3%	26.6%	18.5%
		1977	1978	1979	1981	
	சிங்கள மொழி	81%	64%	61.8%	69.8%	
	தமிழ்மொழி	19%	36%	38.2%	30.2%	

பாலஸ்தீனமும் - தமிழீழமும்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சுருக்கமான வரலாற்றைத் அறிவதன் மூலமும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு அணிசாரா நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் தொடர்ந்து அளித்து வருகிற ஆதரவைச் சுட்டிக்காட்டுவதன் மூலமும் பாலஸ்தீன அராபியர்களைப் போலவே தங்களின் உரிமைகளுக்காகப் போராடும் ஈழ நாட்டுத் தமிழர்கள் பற்றிய ஒரு முழுமையான கணிப்பினைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையில் அவற்றைக் கீழே தருகிறோம்.

1917ஆம் ஆண்டில் பல்போர் பிரகடனத்தின் மூலம் யூதர்களுக்காக பாலஸ்தீனத்தில் ஒரு தாயகத்தை உருவாக்கிக் கொள்ள உதவுவதாக பிரிட்டன் வாக்குறுதி கொடுத்தது. இதைத் தொடர்ந்து பாலஸ்தீனப் பிரச்சினையும் முளைத்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் இப்பிரச்னை

www.tamilarangam.net

வலுக்கத் தொடங்கிற்று. இட்லரின் கொடுமைகளுக்கு ஆளான யூதர்கள் மீது உலக அனுதாபம் இருந்தது. இதையொட்டி ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனத்தின் எதிர்காலம் பற்றிய விவாதம் நடைபெற்றுக்கொண்டு இருந்தபோதே 1948ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதி இஸ்ரேல் என்ற தனி நாட்டை யூதர்கள் பிரகடனம் செய்தனர்.

பாலஸ்தீன மக்களது சுதந்திரப் போராட்டத்தின் முதல் கட்டம் 1920ஆம் ஆண்டில் தொடங்கிற்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிடியில் இருந்து விடுதலை பெற வேண்டுமென்று போராடிய பாலஸ்தீனிய அராபியர்களுக்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஆதரவு தெரிவித்தார்கள். 1937-38ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் பாலஸ்தீனிய விடுதலை போராட்ட வீரர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறை அட்டூழியங்களையும் பாலஸ்தீனிய மக்கள் மீது குண்டு வீசித் தாக்கியதையும் எதிர்த்து இந்தியா போன்ற நாடுகளில் தேசிய இயக்கங்கள் குரல் எழுப்பின.

1928ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாடு கல்கத்தாவில் நடைபெற்றபோது பாலஸ்தீனப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது. இந்தியாவின் சுதந்திர போராட்டத்திற்கு ஒரு பெரும் அபாயமாக விளங்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளப் போராடியதனால் பாலஸ்தீனிய அராபியர்களுக்கு இந்தியா முழு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்தது. 1937ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் பாலஸ்தீனப் பிரிவினையை ஏற்றுக்கொள்ளும்படி அரபுகளை நிர்ப்பந்திக்கும் நோக்கத்தோடு ஏகாதிபத்தியவாதிகள் செய்து வந்த சூழ்ச்சி களைக் கண்டித்து அகில இந்திய மாணவர் சம்மேளனம், இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் ஆகியவையும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு நிதி திரட்டியனுப்பின.

www.tamilarangam.net

''பாலஸ்தீன'' நாடு அரபு நாடு. அரபு நலன்களே அங்கு மேலோங்கி நிற்க வேண்டுமென ஜவஹர்லால் நேரு தெரிவித்தார்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இந்தியாவின் தந்தை காந்தியடிகள் ''யூதர்கள்பால் தமக்கு அனுதாபம் இருந்த போதிலும்'' அந்த அனுதாபம் நீதியைக் காணாதபடி தம் கண்களை மறைத்துவிடவில்லையெனவும், பாலஸ்தீனம் அராபியர்களுக்குச் சொந்தம் எனவும் யூதர்களைத் திணிப்பது தவறு எனவும் எழுதினார்.

1948ஆம் ஆண்டு யுத்தத்திற்குப் பிறகு இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்ட எல்லாப் பகுதிகளிலிருந்தும் வெளியேற வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறி வந்திருப்பதாகவும் இஸ்ரேல் இந்தத் தகராரை மேலும் மேலும் வளர்த்து வருகிறது எனவும் இந்திய அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறி தன் கடும் கண்டனத்தை தெரிவித்திருக்கிறது. இந்தியா சுதந்திரத்திற்கு முன்னேயும், பின்னேயும் அராபியர்கள் பக்கமே இருந்து வந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட முக்கிய தீர்மானங்கள் அனைத்திற்கும் இந்தியா ஆதரவாகவே இருந்துள்ளது. பி.எல்.ஓ.வை பால்ஸ்தீன மக்களின் ஏகப்பிரதிநிதியாக அங்கீகரித்து 1974ஆம் ஆண்டில் ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. 1980ஆம் ஆண்டு மார்ச் 23-25ம் தேதிகளில் புதுடெல்லியில் நடைபெற்ற **ஆசியாவின் சமாதானம் - பாதுகாப்புக்கான சர்வதேச** மகாநாடு பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தது. பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இஸ்ரேலும் மற்ற ஏகாதிபத்திய அரசுகளும் செய்துவரும் சூழ்ச்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டித்தது. ஐ.நா. தீர்மானங்களின்படி தமது தாயகத்திற்குத் திரும்புவதற்கும், முழு அரசு உரிமை படைத்த தமது சொந்த சுதந்திர அரசை அமைத்துக் கொள்வதற்குமான உரிமை உட்பட

www.tamilarangam.net

தமது தேசிய உரிமைகளுக்காகப் போராடி வரும் மக்களுக்கு இந்த சர்வதேச மகாநாடு பேராதரவு தெரிவித்தது.

பி.எல்.ஓ. வரலாறு

அராபிய மக்களின் உயிரைப் பாதுகாக்கவும் இனக் கொடுமைகளைப் புரியும் யூதர்களை எதிர்த்துப் போராடவும் பல்வேறு புரட்சி இயக்கங்கள் முளைத்தன. 1964ஆம் ஆண்டில் இந்த இயக்கங்கள் அத்தனையும் ஒருங்கிணைந்து பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ.) பிறந்தது. 1969ஆம் ஆண்டில் அல்பதா என்ற பாலஸ்தீன புரட்சி இயக்கத்தின் தலைவரான **யாசர் அராபத்** பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். எகிப்து நாட்டில் கொரில்லாப் போர் பயிற்சிகளைக் கற்றுத் தேர்ந்த அவரின் தலைமையின் கீழ் பாலஸ்தீன விடுதலை இயக்கம் புதிய வடிவத்தினைப் பெற்றது.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் உலக நாடுகளின் ஆதரவையும் பெறத் தொடங்கிற்று. 1972ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மொரொக்கோவின் தலைநகரான ராபத் என்னும் இடத்தில் கூடிய 18 அரேபிய அதிபர்கள் பாலஸ்தீனியர்களின் தலைவராக அராபத்தை அங்கீகரித்தார்கள். அதே மாதத்தில் எகிப்து, சவுதி அரேபியா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் பேரவையில் பாலஸ்தீனியர்களின் பிரச்னைப் பற்றி பேசுகிற வாய்ப்பினை அராபத் பெற்றார். இது வரலாறு காணாத நிகழ்ச்சி ஆகும். உலக நாடுகளின் தலைமையகமான ஐ.நா.வில் ஒரு புரட்சி இயக்கத்தின் தலைவர் பேச அழைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். வணக்கத்திற்குரிய போப்பாண்டவர் மட்டுமே அங்கு பேசுவதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைத் தவிர வேறு யாரும் அங்கு பேசுவதற்கு அதுவரை அழைக்கப்பட்டதே இல்லை. முதன்முறையாக பாலஸ்தீன

www.tamilarangam.net

விடுதலை இயக்கத்தின் தலைவரான அராபத் அங்கு பேசுவதற்கு அழைக்கப்பட்டதன் மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கான அங்கீகாரத்தை உலக நாடுகள் அரங்குகளில் அராபத் பெற்றார். இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை பாலஸ்தீனிய இயக்கம் ஏற்படுத்திக் கொண்டது. 1981ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சோவியத் நாடு அராபத்தை அன்புடன் வரவேற்றது. இதனைத் தொடர்ந்து மாஸ்கோவிலுள்ள பாலஸ்தீனிய விடுதலை இயக்க அலுவலகத்திற்கு ஒரு சுதந்திர நாட்டின் தூதரகத்திற்குள்ள மதிப்பு அளிக்கப்பட்டது. அடுத்ததாக சீனாவும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்த தோடு அதற்கு இராணுவ உதவி அளிக்கவும் வாக்குக் கொடுத்தது.

1981ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அராபத் இந்தியாவிற்கு வருகை தந்தார். அவருக்கு அரசும் மக்களும் மகத்தான வரவேற்பு அளித்தனர் பிரதமர் இந்திராவும், அராபத்தும் கூட்டறிக்கை வெளியிட்டனர். பி.எல்.ஓ. இயக்கத்திற்கு இந்தியா அங்கீகாரம் அளித்தது. இதைத் தொடர்ந்து ஆஸ்திரியா, ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகள் அங்கீகாரம் அளித்தன. ஏறத்தாழ 100க்கு மேற்பட்ட நாடுகள் பி.எல்.ஓ.வை அங்கீகரித்துள்ளன. ஐ.நா. சபையில் பி.எல்.ஓ.வை அங்கீகரிப்பதற்கான தீர்மானத்திற்கு ஆதரவாக 105 வாக்குகளும், எதிராக 4 வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன. உலக நாடுகளில் எந்த அளவிற்கு பி.எல்.ஓ.வை ஆதரிக்கின்றன என்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது. 1976ஆம் ஆண்டு ஜனவரியில் மேற்கு ஆசியா பற்றி ஐ.நா. பாதுகாப்புக்குழுவின் விவாதங்களில் கலந்துகொள்ள பி.எல்.ஓ. அழைக்கப்பட்டது ஐ.நா.வில் உறுப்பினராக இல்லாத ஒரு அமைப்பு பாதுகாப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். 1976ஆம் ஆண்டு ஆகஸ்டில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழும்பில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் உச்சகட்ட மாநாட்டில் பி.எல்.ஓ. முழு அங்கீகாரம் படைத்த ஒரு நாடாகக் கலந்துகொண்டது.

1920ஆம் ஆண்டு தொடங்கி பாலஸ்தீனிய அரேபியர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு அணிசேரா நாடுகள் தொடர்ந்து அளித்து வந்திருக்கிற ஆதரவு சுதந்திரத்திலும், ஜனநாயகத்திலும் நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தெம்பூட்டுவதாக அமைந்திருக்கிறது.

பாலஸ்தீனிய அரேபிய மக்களைப் போல தங்களுடைய உரிமை காக்கப் போராடும் தமிழீழ மக்களுக்கு, அணிசாரா நாடுகள் நல்லாதரவை அளிக்க முன்வர வேண்டுமென்று, உலகமெங்கிலும் உள்ள தமிழ் மக்களின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

பாலஸ்தீன விடுதலை இயக்கமும் தமிழீழ விடுதலை இயக்கமும், உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு மக்களால் நடத்தப்படுவனவாயினும் அடிப்படையில் இரண்டும் ஒன்றேயாகும். கொடூரமான சர்வாதிகார ஆட்சிகளின் பிடிப்பிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்க பாலஸ்தீனிய அரேபியர்களும், தமிழீழத் தமிழர்களும் துடிதுடிக்கிறார்கள்.

பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு கைகொடுத்து அவர்களைக் கரையேற்றத் துணைபுரியும் நாடுகளின் ஜனநாயகக் கரங்கள், தமிழீழ விடுதலை இயக்கத்தின்பாலும் நீளட்டும்.

பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு உறுதுணையாக நிற்கும் அணிசாரா நாடுகளின் அதிபர்கள் தங்களுக்கும் நிச்சயமாக உதவுவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தமிழீழத் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவ வேண்டியது அந்நாடுகளின் தலையாய கடமை என்று மிக்க பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

www.tamilarangam.net

50 ஆண்டு காலத்திற்கு மேலாக எவ்வளவோ சோதனைகளுக்கும் கொடுமைகளுக்கும் நடுவே 35 லட்சம் ஈழத் தமிழர்கள் கொஞ்சமும் மனவுறுதி குன்றாமல், செய் அல்லது செத்து மடி என தொடர்ந்து போராடி வருகிறார்கள். தங்களது விடுதலை வேட்கையை உலகறியச் செய்து விட்டார்கள்.

அழிவின் விளிம்பில் நின்று போராடிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு உடனடியாக உதவ முன்வரும்படியும் - அவர்களின் பிரச்னையை அணிசாரா நாடுகளின் கூட்டத்தில் எழுப்பவும் - ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தை இப்பிரச்னையில் திருப்பவும், தேவையான நடவடிக்கைகளை அணிசாரா நாடுகளின் அதிபர்கள் எடுக்கவேண்டும்.

பாலஸ்தீனிய விடுதலைப் பிரச்னையில் உலக நாடுகளில் பெரும்பாலானவை ஆரம்ப காலத்தில் பாராமுகமாக இருந்தன. அகதிகள் முகாம்களில் இருந்தவர்களுக்கு உதவ மட்டுமே முன்வந்தன. அவர்களது போராட்டத்திற்கு ஆதரவோ அங்கீகாரமோ அளிக்கத் தவறின. காலம் கடந்துதான் உலகில் பல்வேறு நாடுகள் பாலஸ்தீனிய விடுதலைப் பிரச்னையில் கவனம் செலுத்தின. ஆரம்பத்தில் இந்த அங்கீகாரத்தை உலகம் கொடுத்திருந்தால் பாலஸ்தீன மக்கள் இவ்வளவு கொடுமைகளுக்கு ஆளாகி இருக்க மாட்டார்கள். அதைப் போலவே இலங்கையில் சிங்கள இராணுவத்தின் கொடுமைகளை எதிர்த்து உறுதியாக நின்று தமிழீழ விடுதலைக்காகப் போராடும் ஈழத் தமிழ் மக்களுக்குத் தற்போதுதான் உலக நாடுகளின் அனுதாபம் கிடைக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த அனுதாபம் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக உருவெடுத்தால் அராபியர்கள் கொடுமைகளுக்கு ஆளானதைப் போன்ற ஈழத் தமிழர்கள் ஆளாகாமல் இருப்பார்கள். பாலஸ்தீனப் பிரச்னை முற்றி உலக நெருக்கடியாக உருவெடுத்துள்ளது போன்ற நிலைமை ஈழ நாட்டுப் பிரச்னையிலும் ஏற்படாமல் தடுக்கவேண்டிய கடமை அணிசாரா நாடுகளின் அதிபர்களுக்குண்டு.

www.tamilarangam.net

அணிசாரா நாடுகளின் அமைப்பில் 100 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 18 நாடுகள் பார்வையாளர்களாகவும், 24 நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாகவும் கலந்துகொள்கின்றன.

சுதந்திர நாடுகள் மட்டுமல்ல, சுதந்திரத்திற்காகப் போராடும் இயக்கங்களான பாலஸ்தீன விடுதலை இயக்கமும், தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கமும், சுதந்திர நாடுகளுக்குரிய முழு அந்தஸ்துடன் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அதைப்போலவே ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், அகில ஆப்பிரிக்க காங்கிரஸ் ஆகிய அமைப்புகள் இம்மாநாட்டில் முழு உரிமையுள்ள பிரதிநிதிகளாக அழைக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்துள்ளன. ஏற்கனவே இந்த 2 இயக்கங்களுக்கும் பார்வையாளர்கள் அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸுக்கு உறுப்பினர் உரிமை வழங்குவதை சோவியத் நாடும், இந்தியாவும் பலமாக ஆதரிக்கின்றன.

எனவே அணிசாரா நாடுகள் அதிபர்களுக்கு இந்த வேலையில் பணிவன்புடன் நாங்கள் தெரிவித்துக் கொள்கிற வேண்டுகோள் ஒன்றுதான், பாலஸ்தீன விடுதலை இயக்கம். தென் மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கம், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், அகில ஆப்பிரிக்க காங்கிரஸ், பியூரிடோரிகோ நாட்டின் சோஷலிஸ்ட் கட்சி, இஸ்லாமிய மாநாடு போன்ற விடுதலைப் போராட்ட இயக்கங்களை அங்கீகரித்து அவற்றை முழு உரிமை பெற்ற உறுப்பினர்களாகவோ அல்லது பார்வையாளர்களாகவோ அழைத்து இருப்பதன் மூலம் அந்த நாடுகளில் வாழும் மக்களின் விடுதலை உணர்வுகளுக்கு நீங்கள் மதிப்பு அளித்திருக்கிறீர்கள். அந்த நாட்டு மக்களை அடக்கி ஆளும் ஏகாதிபத்தியங்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறீர்கள். இந்த விடுதலை இயக்கங்களுக்கு எந்தவிதத்திலும் குறைவு இல்லாத வகையில் தமிழர்களின்

www.tamilarangam.net

விடுதலைக்காகப் போராடிவரும் **தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும்** அங்கீகரிக்கவேண்டும்.

இன்னொன்றையும் உலகமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திர சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகளை வலியுறுத்துகிற ஒரு அமைப்பாக திகழும் அணிசாரா நாடுகளின் அமைப்பில் ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகள் இடம் பெற்று இருப்பது எல்லாவகையிலும் பொறுத்தமற்றதாகும். ஸ்ரீலங்கா அரசு இனவெறி மிகுந்த அரசு. சிறுபான்மை மக்களாக வாழும் தமிழர்களைப் படுகொலை செய்யும் அரசு, சுருக்கமாகச் சொன்னால் சர்வதேச ஜூரிகளின் சபை, சர்வதேச மன்னிப்பு சபை போன்ற சர்வதேச அமைப்புகள் சிங்கள அரசு நடத்திவரும் மனித உரிமை மீறல்களை அப்பட்டமாகக் கண்டித்துள்ளன.

சிங்கள இராணுவத்தை மேலும் மேலும் வலிமைப் படுத்தி தமிழ் இனத்தையே அழித்து ஒழிக்கும் முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் ஆயுதங்களை வாங்கிக் குவித்து தொடர்ந்து தமிழர்களை வேட்டையாடி வருகிறார்கள். இதுவரை 60,000க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் எத்தகைய விசாரணையும் இல்லாமல் சிறை பிடிக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாகி வருகிறார்கள்.

இந்தக் கொடுமைகளைக் கண்டு மனிதநேயம் கொண்டவர்கள் பெரும் கவலை அடைந்திருக்கிறார்கள். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும், மனித உரிமை அமைப்புக்களும் இந்தக் கொடுமைகளுக்கு எதிராக கடும் கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள்.

www.tamilarangam.net

இந்த நிலையில் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவும் அங்கீகாரம் அளிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ்நாட்டு மக்களுக்கு உண்டு. 6 கோடி தமிழ் மக்களும் அணி திரண்டு ஆதரவு தெரிவித்தால் இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளும் இந்திய அரசும் தமிழீழ விடுதலைப் பிரச்சினையில் சரியான நிலை எடுக்கும். இந்தியா சரியான நிலை எடுத்தால் உலக நாடுகளும் சரியான நிலை எடுக்கும். எனவே பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் அடிப்படையில் ஒன்று என்பதை உணர்ந்து ஆதரவு அளிக்க முன்வருமாறு இந்திய அரசையும் உலக நாடுகளையும் வற்புறுத்த வேண்டும். அனைத்துத் தமிழர்களின் தலையாய கடமை இது.

www.tamilarangam.net

www.tamilarangam.net